| Page No.10 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 27.09.2024 |
| O.S. No. | 78/2020 |
| வா.சா.1 | தங்கமணி |

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ம் நாள் தங்கமணி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கமணி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

முதல் விசாரணை –

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 1) 20.10.1947ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவிறக்க நகல் (Q.R. Code Verified) **வா.சா.ஆ.1**, 2) 25.06.2003ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் பதிவிறக்க நகல் (Q.R. Code Verified) **வா.சா.ஆ.2**, 3) 31.01.2020ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவிறக்க நகல் (Q.R. Code Verified) **வா.சா.ஆ.3**, 4) 16.12.2016ம் தேதியிட்ட ரங்கசாமிகவுண்டரின் இறப்புச் சான்றிதழின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**, 5) 12.04.2017ம் தேதியிட்ட

ரங்கசாமிகவுண்டரின் வாரிசு சான்றிதழின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**